செ.வெ.எண்-16 நாள்-10.10.2019

# பத்திரிக்கைச் செய்தி

வேளாண் பணியாளர்கள் பற்றாக்குறையினை கருத்தில் கொண்டு, மாநில அரசு வேளாண் இயந்திரமயமாக்குதல் திட்டத்திற்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. அதிக விலையுள்ள வேளாண் இயந்திரங்களை வாங்க இயலாத வேளாண் பெருமக்களின் நலன்கருதி, வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகை மையங்கள் அமைக்கும் திட்டத்திற்கு அதிக நிதி ஒதுக்கி ஊக்குவித்து வருகிறது. நடப்பாண்டில் அரியலூர் மாவட்டத்தில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகைக்கு வாங்கும் மையங்கள் 14 எண்கள் அமைப்பதற்கு அரசு நிதி ஒதுக்கி உள்ளது.

சிறு மற்றும் குறு விவசாயிகள் அதிக விலையுள்ள வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை சொந்தமாக வாங்கி பயன்படுத்த இயலாததை கருத்தில் கொண்டு, அவற்றை குறைந்த வாடகையில் பெற்று பலனடைய ஏதுவாக வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் வட்டார அளவிலான வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகை மையங்கள் அமைக்கப்பட உள்ளது. ரூ.25 லட்சம் மதிப்பீட்டில் ஒரு வாடகை மையம் அமைத்திட 40 சதவிகித மானியம் என்ற அடிப்படையில் அதிகபட்சமாக ரூ.10 லட்சம் வரை மானியம் வழங்கப்படும். இம்மையம் வட்டார அளவில் அமைக்கப்படுவதால் விவசாய பணிகளுக்கு தேவைப்படும் பல்வேறு வகையான வேளாண் இயந்திரங்கள் கருவிகள் மற்றும் சிறு வேளாண் உபகரணங்கள் அனைத்தும் ஒரே இடத்தில் குறைந்த வாடகையில் தேவைப்படும் விவசாயிகளுக்கு கிடைப்பதால் விவசாய பணிகளை உரிய நேரத்தில் மேற்கொண்டு நல்ல மகசூல் பெற முடியும்.

இவ்வாறான மையங்களை அமைத்திட முன்னோடி விவசாயிகள் விவசாய சுய உதவி குழுக்கள் மற்றும் தொழில் முனைவோர் போன்றோர் முன்வரலாம். இவ்வாடகை மையங்களுக்கு தேவைப்படும் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை அந்தந்த பகுதிகளில் சாகுபடியாகும் பயிர்கள், மண்ணின் தன்மை, வேலையாட்கள் பற்றாக்குறை ஆகியவற்றினை கருத்தில் கொண்டு இம்மையங்களை நடத்த முன்வருபவர்கள் தேர்வு செய்து கொள்ளலாம்.

இவ்வாறான வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகை மையங்களை அமைக்க முன்வருபவர்கள் வேளாண்மைப் பொறியியல் துறையினால் அனுமதிக்கப்பட்ட நிறுவனங்களின் இயந்திரங்களிலிருந்து தங்களின் விருப்பத்தின் அடிப்படையில் தேர்வு செய்து கொள்ளலாம்.

இவ்வாறான மையங்களை அமைத்திட விரும்புவோர் முதலில் அதற்குரிய விண்ணப்பத்தினை அரியலூர் மாவட்டத்திலுள்ள வருவாய் கோட்டத்தில் உள்ள உதவி செயற்பொறியாளர்(வே.பொ) அலுவலகத்தில் அளித்திட வேண்டும். அவ்வாறு வரப்பெற்ற விண்ணப்பங்கள் அரியலூர் மாவட்டத்தில் உதவி செயற்பொறியாளர் (வே.பொ), அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் மூதுரிமை பதிவேட்டில் பதியப்படும். உதவி செயற்பொறியாளர் (வே.போ) அலுவலகங்களுக்கு உரிய நிதி அளிக்கப்பட்டவுடன் அவ்வலுவலகம் மூலமாக மூதுரிமை அடிப்படையில் அம்மையங்களை நடத்த விண்ணப்பித்தவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்படும். விவசாயிகள் குழுக்கள் தமக்கு தேவையான வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் மொத்த தொகையினை சம்மந்தப்பட்ட வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் நிறுவனங்கள் ஒப்புதல் அளித்துள்ள முகவர்களிடம் வரைவோலையாக சம்மந்தப்பட்ட நிறுவனங்களின் பெயரில் செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்திய வரைவோலையின் நகலினை உதவி செயற்பொறியாளர் (வே.பொ) அலுவலகத்தில் அளித்தவுடன் மாவட்ட செயற்பொறியாளர் (வே.பொ) அவர்களால் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் முகவருக்கு உரிய வழங்கல் ஆணை வழங்கப்பட்டு அம்மையத்திற்கு முகவரால் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் அனைத்தும் வழங்கப்படும்.

மொத்த மானிய தொகையில் பொதுப்பிரிவினருக்கு ரூ.5 லட்சமும் ஆதி திராவிடர் பிரிவினருக்கு ரூ.3 லட்சமும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் பயனாளியின் மானிய இருப்பு நிதி கணக்கில் 4 ஆண்டுகளுக்கு இருப்பில் வைக்கப்படும். மீதித் தொகை பயனாளியின் சேமிப்பு வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படும். 4 ஆண்டுகளுக்குப் பின் பயனாளிக்கு மானியத்தில் வழங்கப்பட்ட வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை சம்மந்தப்பட்ட செயற்பொறியாளர் (வே.பொ) அவர்கள் சரிபார்த்த பிறகு மானிய இருப்புத் தொகை பயனாளியின் வங்கிக் கணக்கில் திரும்ப வழங்கப்படும்.

நடப்பு நிதி ஆண்டில் அரியலூர் மாவட்டத்திற்கு 14 எண்கள் வாடகை மையங்கள் அமைத்திட ரூ.1,22,00,000 லட்சம் மானியத் தொகையாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறான வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகை மையம் அமைக்க விரும்புவோர் உடனடியாக வருவாய் கோட்டத்தில் உள்ள உதவி செயற்பொறியாளர் (வே.பொ) அலுவலகத்தில் அணுகி பயன் பெறுமாறு கேட்டுக் கோள்ளப்படுகிறது. மேலும் விவரங்களுக்கு செயற்பொறியாளர் (வே.பொ) அரியலூர் மாவட்டம் அவர்களின் (8667433805) கைப்பேசி எண்ணிற்கும் செயற்பொறியாளர் (வே.பொ) அலுவலகத்தின் தொழில்நுட்ப உதவியாளர் அவர்களின் கைப்பேசி எண்ணிற்கும் (7904293172) உதவி செயற்பொறியாளர் (வே.பொ) அரியலூர் அவர்களின் கைப்பேசி எண்ணிற்கும் (9443399525) மற்றும் உதவி செயற்பொறியாளர் (வே.பொ) ஜெயங்கொண்டம் அவர்களின் கைப்பேசி எண்ணிற்கும் (9442112969) தொடர்பு கொண்டு பயனடையுமாறு வேளாண் பெருமக்களுக்கு கேட்டுக் கொள்ளப்படுகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.டி.ஜி.வினய், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**